**டிசம்பர் – 14**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு சட்டமன்றம் ஆனது, தமிழ்நாடு பாரம்பரிய ஆணையத்தில் இந்து சமய மற்றும் அறநிலையத்துறையின் (HR&CE) உறுப்பினரை உள்ளடக்க முயலும் மசோதாவினை ஏற்றுக் கொண்டது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, 410 மீட்டர் தொலைவிலான இந்தியாவின் முதல் அதிவிரைவு இரயில் போக்குவரத்தின் (Hyperloop) மீதான ஒரு சோதனை வழித் தடத்தினை நிறைவு செய்துள்ளது.
- வடகிழக்கு இந்தியாவின் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்துவதற்கான புதிய தளத்தினை வழங்குவதற்கான முதலாவது அஷ்டலட்சுமி மஹோத்சவ் நிகழ்வானது புது டெல்லியில் நடைபெற்றது.
- மத்திய அமைச்சரவையானது, நாடு முழுவதும் 85 புதிய கேந்திரிய வித்யாலயாக்கள் (KV) மற்றும் 28 ஜவஹர் நவோதயா வித்யாலயாக்கள் (JNV) ஆகியவற்றினை நிறுவச் செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- குஜராத் மாநில அரசானது, பௌத்த/புத்த பாரம்பரிய தளங்களைப் பாதுகாப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் தாய்லாந்து நாட்டில் உள்ள போதிகயா விஜ்ஜாலயா 980 என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- 4வது மீகாங் கங்கை தர்ம யாத்திரை என்ற நிகழ்வானது தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்றது.
- ஐநா போதைப் பொருள் தடுப்பு ஆணையத்தின் (CND) 68வது அமர்வின் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- சர்வதேச ஒருங்கிணைந்த மலை மேம்பாட்டு மையம் (ICIMOD) ஆனது, காற்று மாசுபாடு குறித்த நிகழ்நேர மற்றும் முன்னறிவிக்கப்பட்ட தரவுகளை வழங்கும் பொதுப் பயன்பாட்டு தளமான காற்றுத் தரத் தரவுக் கட்டுப்பாட்டு தளத்தினை வெளியிட்டுள்ளது.
- மெரியம்-வெப்ஸ்டர் என்ற அகராதியானது அதன் 2024 ஆம் ஆண்டின் சிறந்த சொல்லாக 'Polarization' என்பதனை அறிவித்துள்ளது.
- KIIT சர்வதேச ஓபன் போட்டியின் கிளாசிக்கல் செஸ் போட்டியில் டெல்லியைச் சேர்ந்த ஆரித் கபில் (9) கிராண்ட்மாஸ்டரான ராசெட் ஜியாட்டினோவை தோற்கடித்ததன் மூலம், இந்த சாதனையை எட்டிய இளம் இந்தியர் மற்றும் உலகளவில் மூன்றாவது இளையவர் ஆனார்.
- இந்தியாவின் முதல் கூகுள் பாதுகாப்பு பொறியியல் மையத்திற்கான (GSEC) தளமாக ஐதராபாத் நகரம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - இது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் இதற்காக அமைக்கப்பட உள்ள இத்தகைய முதல் வகையிலான மற்றும் உலகளவில் 5வது மையமாகும்.
- உலகத்தின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாக்கச் செய்வதிலும் மனித நல்வாழ்வை மேம்படுத்துவதிலும் மலைப்பகுதிகளின் மதிப்பைப் பற்றியப் பெரும் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 11 ஆம் தேதியன்று சர்வதேச மலைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## 2022-2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் GSDP

- 2022-2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) ஆனது முந்தைய ஆண்டை ஒப்பிடும் போது 14.16% அதிகரித்துள்ளது.

- இது முதன்மையாகத் தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளால் ஏற்பட்டுள்ளது.
- மாநிலத்தின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது தேசியச் சராசரியை விட சுமார் 56% அதிகமாக இருந்தது.
- 'மாநில நிதி நிலைமை – தமிழ்நாடு அரசு 2022-2023' குறித்த தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் தணிக்கை அறிக்கையில் இந்தத் தரவு வெளியிடப்பட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில், சுமார் 15.84% ஆக இருந்த GSDP வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பதிவானது.
- 2022-23 ஆம் ஆண்டில் நடப்பாண்டு விலையிலான GSDP 23,64,514 கோடி ரூபாயாகவும், 2022-23 ஆம் ஆண்டில் நடப்பாண்டு விலையிலான GDP 2,72,40,712 கோடி ரூபாயாகவும் இருந்தது.
- மேலும், 2022-23 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் தனிநபர் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 3,08,020 ரூபாயாகவும், நாட்டின் தனிநபர் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி 1,96,983 ரூபாயாகவும் இருந்தது.
- 2018-19 முதல் 2022-23 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில், வருவாய் வரவுகள் ஆனது 1,73,741 கோடி ரூபாயிலிருந்து 2,43,749 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளதோடு, இதன் சராசரி வருடாந்திர வளர்ச்சி விகிதம் 11.13% ஆகும்.
- இந்த காலகட்டத்தில் மூலதன வரவு ஆனது 54,850 கோடி ரூபாயிலிருந்து 1,02,182 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டில் 13.45% ஆக இருந்த வருவாய் வரவுகளில் மானிய நிதி உதவியின் பங்கு 2022-23 ஆம் ஆண்டில் 15.48% ஆக குறைந்துள்ளது.
- அந்த ஆண்டு மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களுக்காக (CSS) மாநில அரசு 15,270 கோடி ரூபாயை மத்திய அரசின் பங்காகப் பெற்றது.
- 2022-23 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சுமார் 393 என்ற நிதிப் பயன்பாட்டு முறைகேடு வழக்குகள் பதிவாகின மற்றும் 30.81 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

| வருடம் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| **தமிழ்நாடு மாநிலம்** | | | | | |
| GSDP தற்போதைய விலையில் (2011-12 வரிசை) | 16,30,209 | 17,43,144 | 17,88,074 | 20,71,286 | 23,64,514 |
| GSVA | 14,90,042 | 16,01,332 | 16,54,821 | 19,15,234 | 21,76,648 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டவாறு GSDP வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *11.27* | *6.93* | *2.58* | *15.84* | *14.16* |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் GSVAன் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *11.99* | *7.47* | *3.34* | *15.74* | *13.65* |
| தனிநபர் GSDP (₹) | 2,15,785 | 2,29,657 | 2,34,486 | 2,70,629 | 3,08,020 |

## தமிழ்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்களின் இழப்புகள்

- 2021-22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் (GoTN) 68 பொதுத்துறை நிறுவனங்களில் (PSU) சுமார் 30 நிறுவனங்கள் நஷ்டத்தை/ இழப்பினை எதிர்கொண்டுள்ளன.
- ஆனால், 2020-21 ஆம் ஆண்டில் சுமார் 25,476.43 கோடி ரூபாயாக இருந்த பொதுத்துறை

நிறுவனங்களுக்கு ஏற்பட்ட இழப்பு ஆனது 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 22,192.94 கோடி ரூபாயாக குறைந்துள்ளது.

- ❖ தமிழ்நாடு அரசின் மேம்பட்ட உற்பத்திக்கான சிறப்பு மையம் என்ற ஒரு புதிய பொதுத் துறை நிறுவனமும் அதன் செயல்பாட்டின் முதல் ஆண்டில் இழப்பினை மட்டுமே எதிர் கொண்டது.
- ❖ மொத்த இழப்பில், மின்சாரத் துறையில் மூன்று பொதுத்துறை நிறுவனங்கள் 15,357.90 கோடி ரூபாய் பங்கினையும், மாநிலப் போக்குவரத்துத் துறையில் எட்டு பொதுத்துறை நிறுவனங்கள் 6,622.19 கோடி ரூபாய் பங்கினையும் கொண்டுள்ளன.
- ❖ சுமார் 10 பொதுத்துறை நிறுவனங்களில் சுயாதீன இயக்குநர்களின் பிரதிநிதித்துவம் தேவையான எண்ணிக்கையை விட குறைவாக இருந்தது.
- ❖ இரண்டு பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநர்கள் குழுவில் பெண் இயக்குநர்கள் இல்லை.
- ❖ மேலும் ஆறு பொதுத்துறை நிறுவனங்களில், பொதுத்துறை நிறுவனங்களின் பொதுக் கூட்டங்களில் சுயேச்சையான இயக்குநர்கள் கலந்து கொள்ளவில்லை.
- ❖ மேலும் இரண்டு பொதுத்துறை நிறுவனங்களில் தணிக்கைக் குழு அமைக்கப் பட வில்லை என்பதோடு தணிக்கைக் குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் 13 பொதுத்துறை நிறுவனங்களில் சுயாதீன இயக்குநர்களாக இல்லை.
- ❖ 22 பொதுத்துறை நிறுவனங்களில் நியமனம் மற்றும் ஊதியக் குழு ஏதும் அமைக்கப்பட வில்லை.
- ❖ 12 பொதுத்துறை நிறுவனங்களில் இடித்துரைப்பாளர் செயல்முறை இல்லை.

அட்டவணை 5.8: 2020-21 முதல் 2022-23 வரையிலான ஆண்டுகளில் இழப்பு ஏற்பட்டுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை

(₹ கோடியில்)

| ஆண்டு | இழப்பை சந்தித்த பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | நடப்பாண்டின் நிகர இழப்பு | திரண்ட இழப்பு | நிகர மதிப்பு[8] |
|---|---|---|---|---|
| 2020-21 | 33 | 25,542.52 | 1,64,785.03 | (-)1,05,425.53 |
| 2021-22 | 34 | 22,232.33 | 1,83,123.14 | (-)1,25,300.27 |
| 2022-23 | 35 | 16,047.99 | 2,26,051.29 | (-)1,67,419.82 |

## தமிழ்நாடு உணவு சேவை நிறுவனங்கள் சட்டம்- 1958

**23. Penalties.** - (1) Any employer who contravenes any of the provisions of sections 3-A, 4, 5, 6, 7, 9, 10, 11,11-A, 12 and 14-A or fails to pay wages or compensation in accordance with any order of the appellate authority passed under clause (b) of sub-section (2) of section 19 shall, on conviction, be punishable [1] [with fine which, for a first offence, may extend to five thousand rupees and for a second or subsequent offence, with fine which may extend to ten thousand rupees] or with imprisonment which may extend to three months or with both.


(2) (a) Any employer who fails to reinstate an employee in accordance with any order of the appellate authority passed under clause (b) of sub-section (2) of section 19 shall, on conviction, be punishable [1] [with fine which may extend to five thousand rupees.]

- ❖ 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவுச் சேவை நிறுவனங்கள் சட்டத்தினைத் திருத்தி யமைப்பதற்கான மசோதாவினைத் தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது.

- சிறைத்தண்டனையை நீக்குவதையும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில குற்றங்கள் தொடர்பான விதிகளை மீறியதற்காக அபராதம் மட்டும் விதிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறு குற்றங்கள் தொடர்பான விதிமுறைகளை மீறினால், "சிறை தண்டனை விதிக்கும் ஒரு செயல்முறையினை நீக்கி, அபராதத்தினை மட்டும் தண்டனையாக வழங்க" அரசு முடிவு செய்துள்ளது.
- இது உணவுச் சேவை நிறுவனங்களின் முதலாளிகள், உணவுச் சேவைத் தொழிலை மேற்கொள்வதை எளிதாக்கும்.
- முன்னதாக, 3-A, 4, 5, 6, 11-A மற்றும் 14-A ஆகிய பிரிவுகளின் சில விதிகளை மீறினால் சிறைத் தண்டனை விதிப்பதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்தது.

# தேசியச் செய்திகள்

## பீமா சகி யோஜனா திட்டம்




- பெண்களுக்கு பெரும் அதிகாரம் அளிப்பதற்காகவும் மேலும் அவர்களின் நிதி சார் உள்ளடக்கத்திற்காகவும் மத்திய அரசு இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (LIC) ஒரு முன்னெடுப்பாகும்.
- 'பீமா சகி யோஜனா' மூலம், 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 முதல் 70 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், பெண்களுக்கு நிதி அறிவு மற்றும் காப்பீட்டு விழிப்புணர்வை வழங்கவதற்காக முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு சிறப்புப் பயிற்சி மற்றும் உதவித் தொகை வழங்கப்படும்.
- இந்தப் பயிற்சிக்குப் பிறகு, பெண்கள் LIC முகவர்களாகவும், பட்டதாரிக் காப்பீட்டுச்

சகிகளாகவும் (முகவர்களாகவும்) பணியாற்றலாம்.

- LIC நிறுவனத்தில் மேம்பாட்டு அதிகாரியாகப் பணி புரியும் ஒரு வாய்ப்பும் கிடைக்கப் பெறும்.

## வணிகக் கப்பல் போக்குவரத்து மசோதா, 2024

- 2024 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் போக்குவரத்து மசோதாவானது, 1958 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் போக்குவரத்து சட்டத்தினை ரத்து செய்ய முனைகிறது.
- இந்த மசோதாவானது, நாட்டில் உள்ள வணிகக் கப்பல்களுக்கான பல உரிமைகள் தொடர்பான விதிமுறைகளை மறுவரையறை செய்து எளிதாக்குகிறது.
- தற்போது வரையில், இந்தியக் குடிமக்கள் அல்லது நிறுவனங்கள் மட்டுமே இந்தியக் கொடியினை ஏந்தியக் கப்பல்களை இயக்குவதற்குப் பதிவு செய்ய முடியும்.
- இது இந்தியக் கொடியிடப்பட்ட கப்பல்களை இயக்குவதை எளிதாக்குகிறது. மேலும் கடல்களில் ஏற்படும் உயிரிழப்புகளைக் கையாளும் பல்வேறு விதிமுறைகளை மிக நன்கு ஒழுங்குபடுத்துகிறது.
- இந்தியக் கொடியினைக் கொண்ட கப்பல்களின் உரிமை மற்றும் சரக்கு ஏற்றும் டன் அளவினை அதிகரிப்பதற்கான சில தகுதி அளவுருக்களை விரிவுபடுத்தச் செய்வதற்கு இதில் முன்மொழியப் பட்டுள்ளது.
- இந்தியாவில் மறுசுழற்சி செய்ய விரும்பும் கப்பல்களைத் தற்காலிகமாகப் பதிவு செய்வதற்கும் இந்த மசோதா வழிவகை செய்கிறது.
- இது சில உரிமைக் கோரல்களுக்கான வரம்பு நிதியை உருவாக்குவதோடு, மின்னணுப் பதிவு மற்றும் எண்ணிமப் பதிவுகளுடன் கூடிய நிர்வாகச் செயல்முறைகளை நெறிப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## 20வது மனாமா பேச்சுவார்த்தை

- இது பஹ்ரைன் பேரரசில் 2004 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப் படுகிறது.
- இந்த பேச்சுவார்த்தை ஆனது மத்தியக் கிழக்கு நாடுகளின் பாதுகாப்பு கட்டமைப்பின் மைய அங்கமாகும்.
- இது புவிசார் அரசியல், பாதுகாப்புப் போக்குகள் மற்றும் மோதல் தீர்வு பற்றிய சில

கொள்கை விவாதங்களை எளிதாக்குகிறது.

❖ இந்த ஆண்டிற்கான இந்த நிகழ்வின் கருத்துரு, "Middle East Leadership in Shaping Regional Prosperity and Security" என்பதாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## ஹான்லே ஆய்வகம் – துளிம சமிக்ஞைகள்




❖ இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் (RRI) அறிவியலாளர்கள், துளிம சமிக்ஞைகளை விண்வெளியில் செலுத்துவதற்கு உகந்த இடங்களை இந்தியாவில் கண்டறிந்துள்ளனர்.

❖ ஹான்லேயில் உள்ள இந்திய வானியல் ஆய்வகம் (IAO) ஆனது, ஆய்வு செய்யப்பட்ட பல்வேறு தளங்களில் மிகக் குறைவான சமிக்ஞை இழப்பைக் கொண்டுள்ளது.

❖ இது அதன் மிகவும் வறண்டப் பருவநிலை மற்றும் குறைந்த வளிமண்டல நீராவி அளவு ஆகியவற்றின் காரணமாக இந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.


❖ துளிம சமிக்ஞைகள் என்பது துளிம இயக்கவியலின் கொள்கைகளைப் பயன்படுத்தி அனுப்பப்படும் தகவலைக் குறிக்கிறது.

- துளிம இயக்கவியல் ஃபோட்டான்கள், எலக்ட்ரான்கள் அல்லது அணுக்கள் போன்ற மிகவும் சிறிய அளவுகளில் உள்ள பல துகள்களின் நடத்தையை / செயல்பாடுகளை நிர்வகிக்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியப் பாறை மலைப்பாம்புகளின் எண்ணிக்கை குறித்த அறிக்கை 2024

- இந்தியப் பாறை மலைப்பாம்பு (பைத்தான் மொலூரஸ்) ஆனது, தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக வேளாண் பகுதிகள் மற்றும் பாறைகள் நிறைந்த மலையடிவாரங்களில் பெரும்பாலும் காணக் கூடியதாக இருந்தது.
- இருப்பினும், தன் வாழ்விட இழப்பு காரணமாக, மோயார் பள்ளத்தாக்கு தவிர, மாநிலம் முழுவதும் இந்த இனங்கள் குறைந்து விட்டதாக நம்பப்படுகிறது.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் "அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனமாக" வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், MTR, STR மற்றும் பவானி சாகர் ஆகிய இடங்களில் குறைந்த பட்சம் 80 பாறை மலைப் பாம்புகள் இருந்தன.
- பாறை மலைப்பாம்புகள் விஷமற்றவை என்பதோடு அவை பொதுவாக மனிதர்களின் பார்வையில் படுவதைத் தவிர்க்கின்றன.





## நில மேலாண்மை பற்றிய அறிக்கை 2024

- UNCCD அமைப்புடன் இணைந்து பருவநிலைத் தாக்க ஆராய்ச்சிக்கான போட்ஸ்டாம் நிறுவனம் ஆனது 'Stepping back from the precipice: Transforming land management to stay within planetary boundaries' என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- நில வளம் குன்றல்/நிலச் சீரழிவானது, சுமார் 15 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பு அளவிலான நிலத்தினையும், உலகளவில் 1.2 பில்லியன் மக்களையும் பாதிக்கிறது.
- நில வளம் குன்றலின் பொருளாதாரச் செலவினமானது ஆண்டுதோறும் 6.3 முதல் 10.6


டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

- ஒன்பது எல்லைகளுள், அறிவியல் ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குள் மனித குலம் பாதுகாப்பாக செயல்படக் கூடிய ஏழில் நிலம் மையமான ஒன்றாக உள்ளது.




# மாநிலச் செய்திகள்

## அரசு இணையச் சந்தை 2024




- மத்திய அரசின் இணையச் சந்தையுடனான (GeM) தனது கொள்முதல் நடைமுறையை முழுமையாக ஒருங்கிணைத்த நாட்டின் முதல் மாநிலமாக உத்தரப் பிரதேசம் மாறி உள்ளது.
- இந்த ஒருங்கிணைப்பு ஆனது, அனைத்துச் சேவை வழங்குநர்களும் மத்திய அரசின் விதிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

- ஒரு நிறுவனமானது GeM நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் ஏதேனும் ஒரு விலகல் ஏற்பட்டால், உத்தரப் பிரதேச அரசாங்கத்துடன் வணிகம் நடத்துவதில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★